கவனிக்க.- *2015.02.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1904 - 2015 පෙබරවාරි මස 27 වැනි සිකුරාදා - 2015.02.27

1904 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்
சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்	-
சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்	-
அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்	90
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்	-
நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்	-
மற்றைய நியமனங்களும் பிறவும்	90
பதிவாளர் நியமனங்களும் பிறவும்	-
அரசாங்க அறிவித்தல்கள்	91
விலைக் கட்டளைகள்	-
இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்	–
இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள்	-
வரவு செலவுத் திரட்டுக்கள்	-
அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்	93
மாலுமிகளுக்கு அறிவித்தல்கள்	-
மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்	-

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2015, மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மாச்சு மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

அமைச்சரவை நியமனங்களும் பிறவும்

2015 இன் இல. 61

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது:

இலங்கை விஞ்ஞான சேவையின் 1 ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. என். கே. ஏ. ரூபசிங்க அவர்கள், 2014, யூன் மாதம் 10 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை கமத்தொழில் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

2-775

மற்றைய நியமனங்களும் பிறவும்

2015 இன் இல. 62

இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை

தரைப்படைத் தளபதியினால் அங்கீகரிக்கப்பெற்ற வரிசைப் பதவியை நிரந்தரமாக்குதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவரவர் பெயர்களின் முன்னே குறிப்பிட்டிருக்கும் திகதி முதல் கப்டன் வரிசைப் பதவியில் நிரந்தரமாக்குதல் அங்கீகரிக்கப்பெற்றுள்ளது :-

1. *லெப்டினன்ட் (தற்காலிக கப்டன்) ஹர்ஷ தனஞ்ஜய பாதுக்க, இகாபஅணி (உ/66085) - 2013.01.30*
2. *லெப்டினன்ட் (தற்காலிக கப்டன்) வில் ஆரச்சிகே தொன் நிரோஷான் ப்ரியங்க விஜேசிங்க குணதிலக, இசிஅணி (உ/65819) - 2013.04.05*
3. *லெப்டினன்ட் (தற்காலிக கப்டன்) இரத்நாயக்க முதியன்சேலாகே சுரங்ஜீவ வீரநாத் இரத்நாயக, இசிஅணி (உ/65811) - 2013.05.25*

ஆர். என். டீ. இரத்நாயக்க,
டப்டப்வி, ஆர்டப்பி, ஆர்எஸ்பி, யூஎஸ்பி, என்டீயூ, பிஎஸ்சி,
லெப்டினன்ட் ஜெனரல்,
தரைப்படைத் தளபதி.

தரைப்படைத் தலைமையகம்,
கொழும்பு.

2-776/1

2015 இன் இல. 63

இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை

தரைப்படைத் தளபதியினால் அங்கீகரிக்கப்பெற்ற வரிசைப் பதவியை நிரந்தரமாக்குதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவரவர் பெயர்களின் முன்னே குறிப்பிட்டிருக்கும் திகதி முதல் கப்டன் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) வரிசைப் பதவியில் நிரந்தரமாக்குதல் அங்கீகரிக்கப்பெற்றுள்ளது :-

1. *லெப்டினன்ட் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) (தற்காலிக கப்டன் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) பஹல ராலலாகே தனசிறி ப்ரேமரத்ன, யூஎஸ்பி, இசிஅணி (உ/65882) - 2013.04.29*
2. *லெப்டினன்ட் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) (தற்காலிக கப்டன் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) பல்கும்புரே ஜயசிங்க ஹேபவலாகே சரத் சேனாதீர, ஆர்எஸ்பி, இபீப (உ/66208) - 2013.06.16*
3. *லெப்டினன்ட் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) (தற்காலிக கப்டன் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) பாலசூரியகே ப்ரேமலால் இரத்னசிறி, யூஎஸ்பி, இதமசி (உ/65692) - 2013.09.30*
4. *லெப்டினன்ட் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) (தற்காலிக கப்டன் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) தங்கல்ல தேவகே சரத் தர்மசேன, யூஎஸ்பி, எசேஅணி (உ/66212) - 2013.10.10*
5. *லெப்டினன்ட் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) (தற்காலிக கப்டன் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) கால்லகே மர்வின் ஜோசப் பீரிஸ், இதபொசேசி (உ/62668) - 2013.10.19*
6. *லெப்டினன்ட் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) (தற்காலிக கப்டன் (உபகரணக் கட்டுப்பாட்டாளர்) ஹொரதல் பேடிகே லயனல் ஜயசேகர, விகாப (உ/63782) - 2013.10.23*

ஆர். என். டீ. இரத்நாயக்க,
டப்டப்வி, ஆர்டப்பி, ஆர்எஸ்பி, யூஎஸ்பி, என்டீயூ, பிஎஸ்சி,
லெப்டினன்ட் ஜெனரல்,
தரைப்படைத் தளபதி.

தரைப்படைத் தலைமையகம்,
கொழும்பு.

2-776/2

இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை

தரைப்படைத் தளபதியினால் அங்கீகரிக்கப்பெற்ற வரிசைப் பதவியிலிருந்து தாழ்த்துதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களின் பெயர்களின் முன்னே குறிப்பிட்டிருக்கும் திகதி முதல் அவர்களின் நிரந்தரப் பதவி வரிசையான லெப்டினன்ட் வரிசைப் பதவிக்கு தாழ்த்தப்படுதல் அங்கீகரிக்கப்பெற்றுள்ளது :-

1. *லெப்டினன்ட் (தற்காலிக கப்டன்) இந்திக ருவன் கெலும் குமார சிவநெத்தி, இஇகாப (உ/65539) - 2013.02.21*
2. *லெப்டினன்ட் (தற்காலிக கப்டன்) பஸ்நாயக்க மந்திரிரத்நாயகலாகே நிமல் கருணாரத்ன, இசிஅணி (உ/65971) - 2013.10.02*

ஆர். என். டீ. இரத்நாயக்க,
டப்டப்வி, ஆர்டப்பி, ஆர்எஸ்பி, யூஎஸ்பி, என்டீயூ, பிஎஸ்சி,
லெப்டினன்ட் ஜெனரல்,
தரைப்படைத் தளபதி.

தரைப்படைத் தலைமையகம்,
கொழும்பு.

2-776/3

அரசாங்க அறிவித்தல்கள்

காணி அளவைச் சபை

காணி அமைச்சு

2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் பிரிவு 47 (1) (ஈ) இன் கீழ் வருடாந்த தொழில்புரியும் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலஅளவையாளர்களின் பெயர்ப்பட்டியல்

	பதிவு இல.	*முழுப் பெயர்*	*இடைநிறுத்தி/இரத்துச் செய்யப்பட்டுள்ள காலப்பகுதி*
1.	*19650105*	*டொன் டேவிட் கிளரன்ஸ் ஹீன்தெனிய*	*வருடாந்த தொழில்புரியும் அனுமதிப்பத்திரம் 2015.01.01 முதல் 2015.06.30 வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.*

பி. எம். பி. உதயகாந்த,
தலைவர்,
நில அளவைச் சபை.

கொழும்பு,
2015, பெப்புருவரி 13.

2-799

காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் இரண்டாவது நிரலில் குறிப்பிடப்படும் காணி மற்றும் மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் உறுதிகளுக்குரிய முதலாவது நிரலில் காணப்படும் தற்பொழுது சிதைவடைந்து அல்லது கிழிந்துபோயுள்ள காணியினை பதிவு செய்த புத்தகம்/ஏடு மீண்டும் பூரணமாக தற்காலிகமாக தயாரிக்கப்பட்டுள்ளதனால் காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடிதாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்) 4 ஆவது பிரிவிற்கிணங்க இத்தால் அறிவிக்கின்றேன்.

2. 2015.02.27 ஆந் திகதி தொடக்கம் 2015.03.13 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் எந்தவொரு நபருக்கும் மேற்குறிப்பிடப்பட்ட தற்காலிக ஏட்டினை கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிசீலனை செய்து பார்க்க முடியும்.

3. அத்தற்காலிக ஏட்டில் எதுவிதமான அல்லது அதன் குறிப்பில் அடங்கியுள்ள எந்தவொரு விடயம் தொடர்பாக எந்தவிதமான ஆட்சேபனையினை வெளிப்படுத்துவதற்கு விரும்பும் நபர் அல்லது ஏதாவது குறிப்பு அல்லது ஏதாவது குறிப்பினால் விடப்பட்டிருக்கும் விடயத்தினை சேர்ப்பதற்கு வேண்டுகோளினை சமர்ப்பிக்கும் நபர் அந்த ஆட்சேபனையினை அல்லது வேண்டுகோள் அடங்கிய கடிதத்தினை விபரத்துடன் தெளிவாக அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடனும் 2015.03.20 ஆந் திகதிக்கு முன்பதாக இங்கு கீழ் கையொப்பம் இட்டவருக்கு கிடைக்கக்கூடியதாக பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்:-

அட்டவணை

நிரல் I பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள்	நிரல் II காணியின் விபரம்	நிரல் III பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள்
கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு காணிப் பதிவகத்தில் A என்னும் பிரிவில் 318 ஆவது புத்தகத்தில் 279 வது ஏடு.	மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள லொட் A உடைய காணித்துண்டிற்கு ஜே. ஆர். ஏ. ரொட்றிகோ அனுமதிபெற்ற நிலஅளவையாளர் மூலம் 1947.04.15 ஆந் திகதி அளவிடப்பட்ட 3985 ஆம் இலக்க அளவிடை பிரகாரம் எல்லைகள் :- வடக்கு : சீ. ஏ. ஸ்வொக்மன்ட் இற்கு சொந்தமான ஆதனம் ; கிழக்கு : வரிப்பணம் இலக்கம் 21 ; தெற்கு : வண்டில் பாதை என அடையாளம் காணப்படும் பென்டினீஸ் மாவத்தை ; மேற்கு : லொட் 11. விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 10பே.	1. எஸ். ஆர் அமரசேகர பி.நொ. மூலம் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1949.05.25 ஆந் திகதிய 3873 ஆம் இலக்கமுடைய பிரிவிடல் உறுதி. 2. ஆர். ஜயரத்னம் பி. நொ. மூலம் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1977.05.27 ஆந் திகதிய இலக்கம் 622 உடைய விற்பனை இணக்க உடன்படிக்கை
கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு காணிப் பதிவகத்தில் A என்னும் பிரிவில் 579 ஆவது புத்தகத்தில் 26 வது ஏடு.	மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அப்துல் கபூர் மாவத்தையில் அமைந்துள்ள வரிப்பண இலக்கம் 19 உடைய லொட் A2 உடைய காணித் துண்டிற்கு டி. எஸ். ஹெட்டிகே அனுமதிபெற்ற நிலஅளவையாளர் மூலம் 1977.06.26 ஆந் திகதி அளவிடப்பட்ட இலக்கம் 478 ஆம் அளவிடை பிரகாரம் எல்லைகள் :- வடக்கு : லொட் A1 ; கிழக்கு : லொட் A3 ; தெற்கு : அப்துல் கபூர் மாவத்தை ; மேற்கு : அப்துல் கபூர் மாவத்தையின் வரிப்பணம் இலக்கம் 17. விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 26.34பே.	1. ஆர். ஜயரத்னம் பி. நொ. மூலம் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1977.06.29 ஆந் திகதிய இலக்கம் 628 உடைய அறுதி உறுதி.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/69/2014/ஏடு. தயா.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

2-640

காணி அமைச்சு

2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் பிரிவு 27 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நில அளவைச் சபைக்கு உறுப்பினர்களை நியமித்தல்

2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நில அளவைச் சட்டத்தின் பிரிவு 27(ஆ) (i), (ii) ஆகியவற்றின் கீழ், காணி அமைச்சராக எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை நில அளவைச் சபையின் உறுப்பினர்களாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்கு நியமனம் செய்கின்றேன்.

(ஆ) நில அளவைச் சட்டத்தின் பிரிவு 27 (ஆ) (i) இன் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

(i)	டொன் டேவிட் யாப்பா அபேயவர்த்தன	-	2015.01.01 இலிருந்து 2017.12.31 வரை
(ii)	சந்திரவிமல் டி சொய்சா குணதிலக	-	2015.01.01 இலிருந்து 2017.12.31 வரை
(iii)	முகாந்திரம் களுதந்திரி	-	2015.01.01 இலிருந்து 2017.12.31 வரை

(இ) நில அளவைச் சட்டத்தின் பிரிவு 27 (ஆ) (ii) இன் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

(i)	கந்தே ரல்லகே மஹிந்த உபதிஸ்ஸ பண்டார	2015.01.10 இலிருந்து 2017.12.31 வரை

எம். கே. ஏ. டி. எஸ். குணவர்தன,
காணி அமைச்சர்.

கொழும்பு,
2015, பெப்புருவரி 05.

2-800

1973 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வீட்டுரிமைச் சொத்து சம்பந்தமான 13A (d) சட்டத்தின் கீழான அறிவித்தல்

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், தெகிவளை, களுபோவில, ஸ்ரீ மகா விஹாரை வீதியில் இல. 62/1 இல் வசிப்பவரான ஜயசிங்க ஆராச்சிகே தம்யா தமயந்தி என்பவரின் வீட்டை சட்டரீதியாகக் கொள்முதல் செய்வதற்கு தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு விண்ணப்பித்திருந்த போதிலும், இது சம்பந்தமான பரிசீலனை முடிவு பெறாது இருப்பதால் இந்த விண்ணப்பம் சம்பந்தமான இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கு ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்தக் கடிதம் கிடைத்ததிலிருந்து 3 மாதத்துக்குள் எனக்கு அறிவிக்க வேண்டும் இதுசம்பந்தமாகவுள்ள மற்றவர்களுக்கும் இது அறிவிக்கப்படும் என்பதை இத்தால் தெரியப்படுத்துகிறேன்.

சட்டத்தரணி ராஜா குணரத்ன,
வீடமைப்பு ஆணையாளர்.

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு,
2 ஆம் மாடி,
"செத்சிறிபாய",
பத்தரமுல்ல.

2-837

அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2014, ஏப்பிறல் 21 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

"(கடன்பெறுநரான) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகவுள்ளதும், அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை காலியில் கொண்டுள்ளதுமான உபுலி ஒவ்செட் பிரின்டேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், முன்னர் தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் (வங்கி) என்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ. சார்பில் பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) பீ.ஆர். யூ. ரனோஜனி என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.01.05 ஆந் திகதிய 224 ஆம், 2006.04.27 ஆந் திகதிய 301 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மீது வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

அத்துடன் கீழே விபரிக்கப்பட்ட ஆதனத்தினதும் வளவுகளினதும் இறையிலிச் சொந்தக்காரராகவும், பணிப்பாளராகவும் உள்ளவரும், கடன்பெறுநரின் கணிசமானளவு அக்கறையைக் கொண்டுள்ளவருமான புவக்கந்தாவே லொக்குஆச்சாரிகே சோமபால என்பவர், சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் கீழ் அவரது இறையிலி உரிமை, உரித்து மற்றும் அக்கறையை வங்கிக்கு ஈடுவைத்துள்ளாராதலாலும்,

அத்துடன் 2014, மாச்சு 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக அறுபத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து நாநூற்று ஐந்து ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 69,92,405.90) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிகள் மீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் வந்துள்ளதாதலாலும்,

வங்கியின் பணிப்பாளர் சபையானது திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம்இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட

ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட அறுபத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து நாநூற்று ஐந்து ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 69,92,405.90) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட 224 ஆம் இலக்க முறி மீது வருமதியான இருபது இலட்சத்து எழுபதாயிரம் ரூபா (ரூ. 20,70,000.00) கொண்ட பிரதான தொகை மீது ஆண்டொன்றுக்குப் பதினைந்து தசம் ஒன்பது சதவீத (15.9%) வட்டியையும், சொல்லப்பட்ட 301 ஆம் இலக்க முறிமீது வருமதியான இருபத்தாறு இலட்சத்து இருபத்தாறாயிரத்து அறுநூற்று இருபத்தெட்டு ரூபா (ரூ. 26,26,628.00) கொண்ட பிரதான தொகை மீது ஆண்டொன்றுக்குப் பதினாறு சதவீத (16%) வட்டியையும், எல்லாம் 2014, ஏப்பிறல் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை, அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறி மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் அவ்வாதனத்துக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை, உரித்து மற்றும் அக்கறையுட்பட, உத்தரவுபெற்ற ஏலதாரர்களான திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென்மாகாணம், காலி மாவட்டம், காலி மாநகர சபைப் பிரதேசம் மற்றும்நான்கு எல்லைகளினுள் எத்திலிகொடவில் அமைந்தள்ளதும், கதுரு கஹாஓவிட்ட மறுபெயர் கெபெல்லகஹாஓவிட்ட என்றழைக்கப்பட்டு காணித்துண்டம் 3 என வரையறுக்கப்பட்டதும், உரித்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யு. ஏ. கார்வின்டி சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1984.0710 ஆந் திகதிய 2845 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 3அ எனவடையாள மிடப்பட்டதுமான உட்பிரிவிடல் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின தாய் அதன் மீதுள்ளவையும் அதனோடிணைந்துள்ளவையுமான வேறெல்லாவற்றுடனும் மண் மற்றும் மரங்கள் அடங்கலும் ; அதன் எல்லைகள் - வடக்கு : எல (சேற்றுக்குழி) மற்றும் தல்கஸ்துவேவத்த ; கிழக்கு : தல்கஸ்துவ ஹீன் எல; தெற்கு : அதே காணியின் காணித்துண்டங்கள் இல. 2, 3B மற்றும் காணித்துண்டம் 4 அத்துடன்; மேற்கு : ஹேலி வீதி, பரப்பளவில் இது, அதன் மீதுள்ள வேறெல்லாவற்றுடனும் மூன்று றூட் பதினேழு தசம் எட்டு பேர்ச்சுகள் (0ஏ. 3றா. 17.8பே.) கொண்டுள்ளதுடன், காலி காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் A 594/233 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

உ.நி டபிள்யூ. ஏ. கார்வின் டி சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.11.09 ஆந் திகதிய 4181 ஆம் இலக்கப் புதிய நிலஅளவை வரைபடத்தின்படி, சொல்லப்பட்ட காணித்துண்டம் 3A, காணித்துண்டம் 1, 2, 3 என மூன்று காணித்துண்டங்களாக உட்பிரிவிடப்படுகிறது. காணித்துண்டம் 3, 15 அடி அகல வீதி வழியாகவும். அதன் எல்லைகள் - வடக்கு : தல்கஸ்துவேவத்த ; கிழக்கு : தல்கஸ்துவ ஹீன் எல; தெற்கு : காணித்துண்டங்கள் இல. 4, 3B மற்றும் காணித்துண்டம் 2 அத்துடன் ; மேற்கு : காலி பட்டதுவவிலிருந்து ஹேலி வீதி, பரப்பளவில் இது, காணித்துண்டம் 1 (0ஏ 1றா. 18.25பே.) காணித்துண்டம் 2 (0ஏ 1றா. 22.70பே.) காணித் துண்டம் 3 (0ஏ. 0றா. 16.55பே.) கொண்டுள்ளதுடன், காலி காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் A 594/233 இல் பதிவு செய்யப் பட்டுமுள்ளது

சாதனங்கள், நீர் வழங்கல், முறைமைச் சாதனங்கள், தொலைத்தொடர்புச் சாதனங்கள் மற்றும் குளிரூட்டற் சாதனங்களுடன் சேர்த்து மின்சார வழங்கல் முறைமையுட்பட மேலே மேலும் விபரமாக விவரிக்கப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டுக்கு இப்போது இணைக்கப்பட்ட அல்லது நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட அல்லது இதன் பின்னர் காலத்துக்குக் காலம் இணைக்கப்படக்கூடிய அல்லது நிரந்தரமாகப் பொருத்தப்படக்கூடிய அசைவற்ற பொறித்தொகுதியும் எந்திரத்தொகுதியும், சாதனங்கள், இணைப்புக்கள், பொருத்திகள், சேவைகள் என்பன எல்லாவற்றுடனும் சேர்த்து.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

2-665/2

டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கியின் பிஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2014, ஒற்றோபர் 31 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"காத்தாண்டியைச் சேர்ந்த மொஹமட் சலீம் மொஹமட் ஷில்மி மற்றும் காச்சி மொஹமட் மொஹமட் சலீம் என்போர், முன்னர் டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி லிமிட்டெட் எனவறியப்பட்ட டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீ சார்பில் மட்டக்களப்பைச் சேர்ந்த பிரசித்த நொத்ததாரிசு ஆர். காயத்ரீ என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, நவெம்பர் 16 ஆந் திகதிய 140 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவு களைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும்,

2014, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக முப்பத்துமூன்று இலட்சத்து எழுபத்தேழாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா ஏழு சதம் (ரூ. 33,77,395.07) கொண்ட தொகையும், 2014, ஒற்றோபர் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை முப்பத்துமூன்று இலட்சத்து எழுபத்தேழாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா ஏழு சதம் (ரூ. 33,77,395.07) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்துநான்கு சதவீதத்தில் (24%) கணக்கிடப்பட்ட மேலதிக வட்டியும், மேற்சொல்லப்பட்ட 140 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது சொல்லப்பட்ட மொஹமட் சலீம் மொஹமட் ஷில்மி மற்றும் காச்சி மொஹமட் மொஹமட் சலீம் என்போரிடமிருந்து டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால்

அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 140 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப் படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து முப்பத்துமூன்று இலட்சத்து எழுபத்தேழாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா ஏழு சதம் (ரூ. 33,77,395.07) கொண்ட தொகையையும், 2014, ஒற்றோபர் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை முப்பத்துமூன்று இலட்சத்து எழுபத்தேழாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா ஏழு சதம் (ரூ. 33,77,395.07) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்துநான்கு சதவீதத்தில் (24%) கணக்கிடப்பட்ட மேலதிக வட்டியையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டுமுறியினால் காச்சி மொஹமட் மொஹமட் சலீம் என்பரினால் டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அதன் மீதுள்ள கட்டடம் ஆகியவற்றை கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

140 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப் பத்துவில் காத்தான்குடிக் கிராமத்தில் அமைந்துள்ளதும், ''வேம்பு பூமி' எனவழைக்கப்படும் காணியின் பிரிக்கப்பட்டு வரை யறுக்கப்பட்டதுமான அம்மேற்குபுற அரைப்பங்கு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : வீதி; கிழக்கு மற்றும் தெற்கு : எம். ஜேனுலாப்தீனுக்கும் மனைவிக்குமுரிய இக்காணியின் மீதிக் காணிகள் மற்றும் ; மேற்கு : செய்யத்தும்மாவின் காணி ; பரப்பளவில் இது வடக்கிலிருந்து தெற்கு வரை ஒன்பது (09) நான்கு முழம், இரண்டு (02) அடி, ஆறு (06) அங்குலங்கள் மற்றும் கிழக்கிலிருந்து மேற்கு வரை ஆறு (06) நான்கு முழம், ஒரு (01) அடி, பத்து (10) அங்குலங்களைக் கொண்டுள்ளது. இதனோடு வீடும், கிணறும் அதன்கண் அடங்கியுள்ள எல்லா உரிமைகளும்:

மிக்க அண்மையிலான நிலஅளவையின்படி சொல்லப்பட்ட காணி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பிரதேச செயலகத்தில் காத்தான்குடி நகர சபை எல்லைகளினுள் 06 ஆம் இலக்க வட்டாரத்தில் பவுண்டறி ஒழுங்கையில் அமைந்துள்ளதும், 58 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. சிங்கராஜா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.08.14 ஆந் திகதிய AS/11/ காத்/ 182A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 01 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், ''வேம்பு பூமி' எனவழைக்கப்படுவது மானதொரு காணித்துண்டு ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : ராசா அலீம் வீதி ; கிழக்கு : ஒழுங்கை ; தெற்கு : எம். ஐ. சேனுலாப்தீன் மற்றும் மனைவியின் தோட்டம் மற்றும் ; மேற்கு : எம். ஐ. செய்யத்தும்மாவின் தோட்டம், பரப்பளவில் இது, 0.0190 ஹெக்டேயர்களை அல்லது ஏழு தசம் ஐந்து ஒன்று பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 7.51பே.) கொண்டுள்ளது. இதனோடு நிரந்தரக் கட்டிடமும், கிணறும் அதன்கண் அடங்கியுள்ள எல்லா உரிமைகளும்.

லக்ஷ்மன் சில்வா,
பிரதான பிறைவேற்றலுவலர்.

டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீ,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

2-801

தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2014, ஏப்பிறல் 21 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

''(கடன்பெறுநரான) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகவுள்ளதும், அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை காலியில் கொண்டுள்ளதுமான உபுலி ஓவ்செட் பிரின்டேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், முன்னர் தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் (வங்கி) என்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ. சார்பில் பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) பீ.ஆர். யூ. ரனோஜனி என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.01.05 ஆந் திகதிய 226 ஆம், 2006.04.27 ஆந் திகதிய 303 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மீது வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

அத்துடன் 2014, மாச்சு 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக முப்பத்தொரு இலட்சத்து பதின்நான்காயிரத்து இருநூற்று நாற்பத்துமூன்று ரூபா எட்டு சதம் (ரூ. 31,14,243.08) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிகள் மீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் வந்துள்ளதாதலாலும்,

வங்கியின் பணிப்பாளர் சபையானது திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம்இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட முப்பத்தொரு இலட்சத்து பதின்நான்காயிரத்து இருநூற்று நாற்பத்துமூன்று ரூபா எட்டு சதம் (ரூ. 31,14,243.08) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட 226 ஆம் இலக்க முறி மீது வருமதியான பதின்மூன்று இலட்சத்து எண்பதாயிரம் ரூபா (ரூ. 13,80,000.00) கொண்ட பிரதான தொகை மீது ஆண்டொன்றுக்குப் பதினைந்து தசம் ஒன்பது சதவீத (15.9%) வட்டியையும், சொல்லப்பட்ட 303 ஆம் இலக்க முறிமீது

வருமதியான ஆறு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து அறுநூற்று ஐம்பத்தேழு ரூபா (ரூ. 6,56,657.00) கொண்ட பிரதான தொகை மீது ஆண்டொன்றுக்குப் பதினாறு சதவீத (16%) வட்டியையும், எல்லாம் 2014, ஏப்பிறல் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை, அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறி மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்ட அசைவுள்ள ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர்களான திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

பின்வருவனவுட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் இதன்கண் முழுமையாக விவரிக்கப்பட்ட வளவுகளில் அத்துடன்/ அல்லதுஅதன் மீதுள்ள கட்டிடங்களில் வைத்திருக்கப்பட்ட அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட அல்லது அவற்றோடு இணைக்கப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட பொறித்தொகுதி எந்திரத்தொகுதி சாதனங்கள் இணைப்புக்கள் மற்றும் பொருத்திகள் அடங்கலும் :

1. ரிசோகிராப் சுப்பர் டிஜிட்டர் டுப்ளிகேட்டர்/பிரின்டர் - மாதிரி MZ 770 நிறுத்தியுடன் - இரண்டு நிறம் ;
2. கொனிக்கா மினேல்ட்டா பிஸ்ஹப் நிற பிரின்ட்டிங் கொப்பியர்/ ஸ்கானிங் மாதிரி C250 ;
3. கிராபி ஆர்ட் கணனி வெளியீட்டு உபாயத்துக்கு ஹை- டெக் தரவு செய்முறைப்படுத்தற் பொறி - FT-R 5055 ஒன்லைன் (கட்னா);
4. இரு நிற அச்சீட்டுப் பொறியில் 01 ஓவ்செட் ஸ்பீட் மாஸ்ட்டர்;
5. KFW இன் கீழ் 01 பேர்பெக்ட் கட்டும்பொறி - V லைன்ஒவ் கிரெடிட்

மேற்படி அசைவுள்ள ஈடுவைக்கப்பட்ட ஆதனம், காணிப் பதிவத்தின் பதிவுப் பிரிவினுள் தென் மாகாணம் காலி மாவட்டத்தில், காலி வந்துராப, டீ. சம்சன் ராஜபக்ஷ மாவத்தை, 28 ஆம் இலக்கத்தில் உபுலி ஓவ்செட் பிரின்டேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டில் வைத்திருக்கப்படுகிறது அல்லது களஞ்சியப்படுத்தப்படுகிறது.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

2-665/1

டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கியின் பிஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2014, ஒற்றோபர் 31 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"இருவரும் வவுனியாவைச் சேர்ந்த பாலசுந்தரம் சந்திரகுமார் மற்றும் சந்திரகுமார் மீனாதேவி என்போர், டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீ சார்பில் வவுனியாவைச் சேர்ந்த பிரசித்த நொத்ததாரிசு பீ. அன்ரன் புனிதநாயகம் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, சனவரி 30 ஆந் திகதிய 1953 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும்,

அத்துடன் 2014, யூலை 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக எண்பத்திரண்டு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து அறுநூற்று எண்பத்தெட்டு ரூபா முப்பது சதம் (ரூ. 82,88,688.30) கொண்ட தொகையும், 2014, ஓகத்து 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை எழுபது இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பது சதம் (ரூ. 70,51,979.75) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி , ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாம் வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஐந்து தசம் ஐந்துசதவீத (5.5%) வட்டியும், சொல்லப்பட்ட பாலசுந்தரம் சந்திரகுமார் மற்றும் சந்திரகுமார் மீனாதேவி என்போரிடமிருந்து டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 1953 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து எண்பத்திரண்டு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து அறுநூற்று எண்பத்தெட்டு ரூபா முப்பது சதம் (ரூ. 82,88,688.30) கொண்ட தொகையும், எழுபது இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பதுரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 70,51,979.75) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி , ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாம் வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) 2014, ஓகத்து 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு ஐந்து தசம் ஐந்துசதவீத (5.5%) வட்டியையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டுமுறி மூலம் டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள்

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

1953 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வட மாகாணம், வவுனியா மாவட்டம், வவுனியா தெற்கு, கிழக்கு மூலைத் தெற்கு, வைரவர் புளியங்குளத்தில் அமைந்துள்ளதும், பரப்பளவில் பூச்சியம் தசம் பூச்சியம் நான்கு எட்டு ஒன்று ஹெக்டேயர்களை (0.0481 ஹெக்.) அல்லது பத்தொன்பது தசம் சைவர் இரண்டு பேர்ச்சு (0ஏ. 0றூ. 19.02பே.) கொண்டுள்ளதும், உத்தரபெற்ற நிலஅளவையாளர் கே. கருணைவேல் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004/01/31 ஆந் திகதிய 0403 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 1 எனக் குறித்துக் காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டதுான அக்காணிப்பாகம் அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : வைரவர் கோவில் வீதியின் 10 ஆவது ஒழுங்கை ; கிழக்கு : மேற்கூறப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டம் 2 ; தெற்கு : ஜீ. ஸ்ரீஸ்கந்தராஜாவுக்குரிய வைரவர் புளியங்குளம் வீதியில் 194A ஆம் இலக்க வளவுகள் ; குருமண்காடு மற்றும் ; மேற்கு : வைரவர் கோவில் வீதியிலிருந்து 10 ஆவது ஒழுங்கை, 27 ஆம் இலக்க வளவுகள், குருமண்காடு மற்றும் உமாசரனின் மனைவி தமயந்திக்குரிய ஆதனம். சொல்லப்பட்ட எல்லைகளினுள் உள்ள முழுவதும்.

லக்ஷ்மன் சில்வா,
பிரதம பிறைவேற்றலுவலர்.

டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீ,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு.

2-802

டீ. எவ். சீ. சீ. வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, டீ. எவ். சீ. சீ. வர்தன வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2014, திசெம்பர் 17 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"திருகோணமலை, கிண்ணியாவைச் சேர்ந்த அப்துல் ஹமீது முகம்மது பாயிஸ் என்பவர், முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனவறியப்பட்ட டீ. எவ். சீ. சீ. வங்கி சார்பில் திருகோணமலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ரீ. துஸ்யந்தன் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, திசெம்பர் 7 ஆந் திகதிய 1369 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் 2012, மே 18 ஆந் திகதிய 1583 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும்,

2014, செத்தெமபர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஐம்பது இலட்சத்து முப்பதாயிரத்து நாற்பத்துமூன்று ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூ. 50,30,043.48) கொண்ட தொகையும், 2014, ஒற்றோபர் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை பதின்நான்கு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து முந்நூற்று இருபத்தைந்து ரூபா (ரூ. 1,458,325) கொண்ட தொகை மீது மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்ந்தாகவிருக்கும் வட்டி வீதமும் ஆண்டொன்றுக்கு எட்டுச் சதவீத (8.0%) விளிம்பும், அதாவது -

(அ) சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 வது வேலை நாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதம் (சஎபிவீ);

அல்லது

(ஆ) சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 வது வேலை நாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் பிடித்து வைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்,

முப்பத்துமூன்று இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து அறுநூற்று எழுபத்துமூன்று ரூபா எழுபத்தேழு சதம் ரூபா (ரூ. 33,47,673.77) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நோத்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் ஆண்டொன்றுக்கு எட்டுத் தசம் ஐந்து சதவீத (8.5%) மேலதிக வட்டியும், சொல்லப்பட்ட வீதம் ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். மேற்கூறப்பட்ட 1369 ஆம், 1583 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மீது சொல்லப்பட்ட அப்துல் ஹமீது முகம்மது பாயிஸ் என்பவரிடமிருந்து டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும் பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினாலும் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப் படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 1369, 1583 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க டீ. எவ். சீ. சீ. வங்கியினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியையும் கட்டிடங்களையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஐம்பது இலட்சத்து முப்பதாயிரத்து நாற்பத்துமூன்று ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூ. 50,30,043.48) கொண்ட தொகையும், 2014, ஒற்றோபர் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை பதின்நான்கு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து முந்நூற்று இருபத்தைந்து ரூபா (ரூ. 1,458,325) கொண்ட தொகை மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்ந்தாக விருக்கும் வட்டி வீதமும் ஆண்டொன்றுக்கு எட்டுச் சதவீத (8.0%) விளிம்பும், அதாவது -

(அ) சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 வது வேலை நாளன்று மூன்று மாதங்களுக்கொரு

தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதம் (சஎபிவீ);

அல்லது

(ஆ) சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 வது வேலை நாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் பிடித்து வைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்,

முப்பத்துமூன்று இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து அறுநூற்று எழுபத்துமூன்று ரூபா எழுபத்தேழு சதம் ரூபா (ரூ. 33,47,673.77) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நோத்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் ஆண்டொன்றுக்கு எட்டுத் தசம் ஐந்து சதவீத (8.5%) மேலதிக வட்டியும், சொல்லப்பட்ட வீதம் ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வேலைநாளன்று மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட 1369 ஆம், 1583 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் அப்துல் ஹமீது முஹம்மது பாஸில் என்பவரினால் டீ. எவ். சீ. சீ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

1369 ஆம், 1583 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் கிண்ணியா நகர சபை எல்லைகளினுள் சின்ன கிண்ணியா, வட்டார இல. 01 இல் அமைந்துள்ளதும், கிண்ணியா 01, மட்டக்களப்பு வீதி, 27 ஆம் இலக்க வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், கிண்ணியா தோட்டம் என அழைக்கப்பட்டதும், திருகோணமலையைச் சேர்ந்த உ. நி., ஆர். பாலேந்திரன் என்பவரினால் வரையப்பட்ட 2008.08.01 ஆந் திகதிய 1342 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்ட பாகமாகவுள்ளதுமான அக்காணி மற்றும் வளவுகள் அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : எம். எஸ். உவய்ஸினால் உரிமை கோரப்பட்ட ஆதனம் ; கிழக்கு : அரச காணி ; தெற்கு : எம். எஸ். உவய்ஸினால் உரிமை கோரப்பட்ட ஆதனம் ; மேற்கு : மட்டக்களப்பு வீதி. பரப்பளவில் 0ஏ. 1றூ. 14.11பே.

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் கிண்ணியா நகர சபை எல்லைகளினுள் சின்ன கிண்ணியா, வட்டார இல. 01 இல் அமைந்துள்ளதும், கிண்ணியா 01, மட்டக்களப்பு வீதி, 27 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதுமான மேலே சொல்லப்பட்ட காணி மீள் நிலஅளவையிடப்பட்டு, இத்தால் ஈடுவைக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பாகம், உ.நி., எம். ஏ. மொஹமட் அன்வர் என்பவரினால் வரையப்பட்ட 2011.11.20 ஆந் திகதிய 633 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A என அடையாளமிடப்பட்டதும். அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : எம். எஸ். உவய்ஸினால் உரிமை கோரப்பட்ட ஆதனம் ; கிழக்கு : திருகோணமலையைச் சேர்ந்த உ.நி., ஆர். பாலேந்திரன் என்பவரினால் வரையப்பட்ட 1342 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 இன் எஞ்சியுள்ள பகுதி; தெற்கு : எம். எஸ். உவய்ஸினால் உரிமை கோரப்பட்ட ஆதனம் ; மேற்கு : மட்டக்களப்பு வீதி. பரப்பளவில் 0ஏ. 1றூ. 0பே. அது தொடர்பான எல்லா உரிமைகளுடனும் சேர்த்து.

ஏ. ஆர். பர்ணாந்து,
பொது முகாமையாளர்.

டீ. எவ். சீ. சீ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

2-803

மக்கள் வங்கி - புத்தளம் கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2014.05.26 ஆந் திகதி நடைபெற்ற அவர்களின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"மக்கள் வங்கியின் சார்பில் மாரவில பிரசித்த நொத்தாரிசு திருமதி பீ. ரி. எஸ். ரன்சிரினி ஜோசப் அவர்களால் 2011.08.29 ஆந் திகதி 20,00,000 க்காக அத்தாட்சிப்படுத்தப்பட்ட 360 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீதும், 2011.08.29 ஆந் திகதி 20,00,000 க்காக அத்தாட்சிப்படுத்தப்பட்ட 362 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீதும், 2013.03.20 ஆந் திகதி 17,50,000 க்காக அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1081 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீதும் வருமதியான கொடுப்பனவுகள்.

"மஹாதேவன் தயானாத் என்றழைக்கப்படும் மஹாதேவன் தயானாஸ் என்பவர்களால் குறிப்பிட்ட பிணை முறிகளின்மீது மக்கள் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய பத்து இலட்சத்து எழுபத்தோராயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று இரண்டு ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 10,71,992.81) பணமும், இருபதுஇலட்சம் ரூபா (ரூ. 20,00,000) பணமும், ஏழு இலட்சத்து எண்பத்தையாயிரத்து இருபத்துமூன்று ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 7,85,023.26) பணமும், ரூபா பத்து இலட்சத்து நாற்பத்தோராயிரத்து ஐநூற்று ஒன்பது ரூபா இரண்டு சதம் (ரூ. 10,41,509.02) தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் இப்பொழுது சொல்லப்பட்ட பத்து இலட்சத்து எழுபத்தோராயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று இரண்டு ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 10,71,992.81) மீது 2014.02.03 ஆந் திகதி முதல் ஏலவிற்பனை திகதி வரை ஆண்டொன்றுக்கு பதினைந்து (15%) சத விகிதப்படி வட்டியும், இருபது இலட்சம் ரூபா (ரூ. 20,00,000) மீது 2013.09.01 ஆந் திகதி முதல் ஏலவிற்பனை திகதி வரை ஆண்டொன்றுக்கு பதினாறு (16%) சத விகிதப்படி வட்டியும், ஏழு இலட்சத்து எண்பத்தையாயிரத்து இருபத்துமூன்று ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 7,85,023.26) மீது 2014.01.25 ஆந் திகதி முதல் ஏலவிற்பனை திகதி வரை ஆண்டொன்றுக்கு பதினைந்து

(15%) சத விகிதப்படி வட்டியும், பத்து இலட்சத்து நாற்பத்தோராயிரத்து ஐநூற்று ஒன்பது ரூபா இரண்டு சதம் (ரூ. 10,41,509.02) மீது 2014.01.08 ஆந் திகதி முதல் ஏலவிற்பனை திகதி வரை ஆண்டொன்றுக்கு பதினைந்து (15%) சத விகிதப்படி வட்டியும், ஏல விற்பனை திகதி வரை தொடர்ந்தும் வட்டியையும் குறிப்பிட்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29(எல்) பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணம் செலவுகள் உட்பட அதன் பின்னர் கொடுப்பனவுகள் ஏதும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து மேற்கண்ட பத்து இலட்சத்து எழுபத்தோராயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று இரண்டு ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 10,71,992.81) பணமும், இருபதுஇலட்சம் ரூபா (ரூ. 20,00,000) பணமும், ஏழு இலட்சத்து எண்பத்தையாயிரத்து இருபத்துமூன்று ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 7,85,023.26) பணமும், பத்து இலட்சத்து நாற்பத்தோராயிரத்து ஐநூற்று ஒன்பது ரூபா இரண்டு சதம் (ரூ. 10,41,509.02) பணத்தையும் வட்டியையும் வேறும் கட்டணங்களையும் ஒரே முறையில் அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 360, 362, 1082 ஆம் இலக்க ஈட்டு முறிகளினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சொக்மன் அன்ட் சமரவிக்ரம கம்பனியினால் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.”

அட்டவணை

1. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், புத்தளம் காணிப் பதிவகப் பிரிவிற்கு உட்பட்ட புத்தளம் கடவத்சதர பிரிவுக்குள் அமைந்துள்ள, புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புத்தளம் நகர சபை அதிகார எல்லைக்குள் தில்அடிய கிராம உத்தியோகத்தர் பிரிவு, புத்தளம் நகரத்தின் நிந்தெனிய என்ற கிராமத்தில் அமைந்துள்ள நிந்தெனிய காணி என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஜே. ஏ. வி. ராஜநாயகம் அவர்களால் 2001.11.23 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட வரைபடம் 2001.03.28 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1495 ஆம் இலக்க வரைபடத்தின் 04 ஆம் இலக்க காணித்துண்டுக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் அவர்களினால் அத்தாட்சிப்படுத்திய வரைபடத்தின் பிரகாரம் காணிக்கான எல்லைகள் - வடக்கு : மேற்கண்ட வரைபடத்தின் 03 ஆம் இலக்க காணித்துண்டு ; கிழக்கு : மேற்கண்ட வரைபடத்தின் 05 ஆம் இலக்க திரேசாவுக்குச் சொந்தமான காணித்துண்டு ; தெற்கு : பிரதேச சபைப் பாதை ; மேற்கு : மார்க்கு என்பவருக்குச் சொந்தமான காணி என்ற எல்லைகளுக்குட்பட்ட இரண்டு றூட், எட்டு பேர்ச். (0ஏ. 2றூ. 8பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடங்கள், உட்பட அனைத்தும் அடங்கலாக. இது புத்தளம் காணிப் பதிவகத்தில் ஏ/ 04/ 171 இன் கீழ் பதியப்பட்டு உள்ளது.

2. மேற்கண்ட புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புத்தளம் நகர சபை அதிகார எல்லைக்குள் தில்அடிய கிராம உத்தியோகத்தர் பிரிவு, புத்தளம் நகரத்தின் திந்தெனிய என்ற கிராமத்தில் அமைந்துள்ள நிந்தெனிய காணி என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. வீ. டீ. பாலசுப்பிரமணியம் அவர்களால் 2000.10.29 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1704 ஆம் இலக்க வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணித்துண்டுக்கான எல்லைகள் - வடக்கு : அபூஹனிபாவிற்குச் சொந்தமான காணி ; கிழக்கு : வினீபிரீடாவுக்குச் சொந்தமான காணி ; தெற்கு : கே. செந்தில்மானிக்குச் சொந்தமான காணி ; மேற்கு : பாதை என்ற எல்லைகளுக்குட்பட்ட பதின்நான்கு தசம் ஆறு பேர்ச். (0ஏ. 0றூ. 14.6பே.) விஸ்தீரணமுள்ளகாணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடங்கள், உட்பட அனைத்தும் அடங்கலாக. இது புத்தளம் காணிப் பதிவகத்தில் A/Put/01/67 இன் கீழ் பதியப்பட்டு உள்ளது.

பணிப்பாளர் சபையின் உத்தரவுப்படி,

பிரதம முகாமையாளர்,
புத்தளம்.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 79, மாரவில வீதி,
நாத்தாண்டிய.

2-748

இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவினதும் (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

கோட்டை, எத்துல் கோட்டை, 6 ஆவது ஒழுங்கை, இல. 941/28 இல் அமைந்த எக்ஸ்பிரஸ் மார்க்கட்டிங் இம்பெக்ஸ் என்னும் பெயரிலும் மாதிரியிலுமி வியாபாரம் நடாத்துகின்ற தொலைஹல கங்கானம்கே குலரத்ன மார்டின் அல்லது தொலைஹல கங்கானம்கே குலரத்ன என்பவரின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைத்த ராஜகிரிய, நாவல, வளவ்வத்த, வளவ்வத்த பிளேஸ், இல. 19/1C இல் அமைந்த ஆதனம்.

2014.12.02 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

“1. பிரசித்த நொத்தாரிசு எஸ். எச். ரணவக்க அத்தாட்சிப்படுத்திய 2005.08.18 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2044, பிரசித்த நொத்தாரிசு எஸ். ஏ. டி. பீ. ஆர். குணவர்தன அத்தாட்சிப்படுத்திய 2007.10.01 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 97 மற்றும் 2008.05.05 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 149 ஆகியவற்றின் பேரில் கோட்டை, எத்துல் கோட்டை, 6 ஆவது ஒழுங்கை, இல. 941/28 இல் அமைந்த எக்ஸ்பிரஸ் மார்க்கட்டிங் இம்பெக்ஸ் என்னும் பெயரிலும் மாதிரியிலும் வியாபாரம் நடாத்தும் (சொந்த முகவரி இல. 19/1C (தற்சமயம் 23) வளவ்வத்த பிளேஸ், வளவ்வத்த, நாவல, ராஜகிரிய) என்னும் முகவரியைச் சேர்ந்த) தொலைஹல கங்கானம்கே குலரத்ன மார்டின் அல்லது தொலைஹல கங்கானம்கே குலரத்ன என்பவரிடமிருந்து 2014.11.13 ஆந் திகதி வரை தவணைக் கடன் வசதி மற்றும் மேலதிகப் பற்று வசதி மீது தீர்க்காதிருக்கும் முதலும் வட்டியும் முறையே மூன்று கோடியே ஒரு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து அறுநூற்று இருபத்தாறு ரூபா அறுபத்திரண்டு சதம் (ரூ. 3,01,84,626.62), இரண்டு கோடியே இருபத்தைந்து இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து முந்நூற்று எழுபத்துமூன்று ரூபா நாற்பத்து நான்கு சதம் (ரூ. 2,25,42,373.44) அத்துடன் ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சம் ரூபா (ரூ. 1,35,00,000) தவணைக் கடன் மீது ஆண்டுக்கு பதின்மூன்று (13%) வீதத்திலும்

ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபா (ரூ. 1,20,00,000) நிரந்தர மேலதிகப் பற்று வசதி மீது ஆண்டுக்கு பதின்நான்கு சதவீத (14%) வீதத்திலும் 2014.11.14 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட முறி இல. 2044, முறி இல.97 மற்றும் முறி இல. 149 ஆகியவற்றின் பேரில் தவணைக் கடன் வசதி மீது மூன்று கோடியே ஒரு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து அறுநூற்று இருபத்தாறு ரூபா அறுபத்திரண்டு சதம் (ரூ. 3,01,84,626.62) நிரந்தர மேலதிகப் பற்று வசதி மீது இரண்டு கோடியே இருபத்தைந்து இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து முந்நூற்று எழுபத்துமூன்று ரூபா நாற்பத்து நான்கு சதம் (ரூ. 2,25,42,373.44) அத்துடன் 2014.11.14 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடு வைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி (அறவிடல் தொகுதிக் கிளை) தொடர்பாடல் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகிறது.".

அட்டவணை

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லே பற்றுவில்ஸ்ரீ ஜயவாத்தனபுர கோட்டை மாநகர சபை எல்லைகளுள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவில் நாவல மேற்கு 520 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் நாவலயில் அமைந்த வளவ்வத்த பிளேஸ் வரிமதிப்பீட்டிலக்கம் 19/1C ஐக் கொண்ட ஹெடவகஹவத்த, கஹட்டகஹவத்த அல்லது கொரககஹவத்த என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஏ. வீரக்கொடி தயாரித்த 1997, நவெம்பர் 22 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 601B இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : துண்டு 1 உம் ; கிழக்கு : வளவ்வத்த பிளேஸ் வரைபடம் இல. 27/90 இல் துண்டு 1 இன் மீதிப்பாகமும் ; தெற்கு : பீ. கால்லகேயின் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 27/90 இல் துண்டு 2 உம் ; மேற்கு : வளவ்வத்த பிளேசும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 601 B இன்படி பதினைந்து தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ.0றூ. 15.5பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

துண்டு 2 என அடையாளமிட்ட மேற்குறிப்பிட்ட காணித்துண்டு பின்வரும் காணியிலிருந்து மீளளவை செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நாவலயில் அமைந்த ஹெடவககஹவத்த, கஹட்டகஹவத்த அல்லது கொரககஹவத்த என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஏ. வீரக்கொடி தயாரித்த 1997, யூலை 16 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 590 இல் விபரித்த துண்டு A1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : துண்டு A2 உம் ; கிழக்கு : பீ. கால்லகே என்பவரின் வரைபடம் இல. 27/90 இல் துண்டு 1 இன் மீதிப்பாகமும் ; தெற்கு : வரைபடம் இல. 27/90 இல் துண்டு 2 உம் ; மேற்கு : வளவ்வத்த பிளேசும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 590 இன்படி பதினைந்து தசம் ஐந்து சைபர் பேர்ச்சுகள் (0ஏ.0றூ. 15.50பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நுகேகொடை, தெல்கந்த, காணிப் பதிவகத்தில் M 3064/218 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. (மேற்குறிப்பிட்ட துண்டு 2 தற்போது வரிமதிப்பு இல. 23 என மதிப்பிடப்பட்டுள்ளது).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தொடர்பாடல் முகாமையாளர்,
அறவிடல் தொகுதி.

இலங்கை வங்கி,
அறவிடல் தொகுதிப் பிரிவு,
"BOC சதுக்கம்",
இல. 01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.
2015.01.21.

2- 797